**12–5–2007 ( சனிக்கிழமை ) காலை**

**சட்டமன்றத்தில் நடைபெற்ற “**

**சட்டப்பேரவையில் கலைஞர்**

**பொன்விழாவில்” மாண்புமிகு**

**சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.**

**ஆவுடையப்பன் அவர்கள் ஆற்றிய**

<u>வரவேற்புரை</u>

முதுபெரும் அறிஞர் பெருமக்களும், ஆன்றோரும், சான்றோரும் அலங்கரித்த

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் நடைபெறும் பொன்விழா நிகழ்ச்சிக்கு, அழியாப் புகழும், சிறப்பும் பெற்று, வரலாறுகளைப் படைத்து, வரலாறாக வாழ்ந்து வரும் வரலாற்று நாயகன், பகுத்தறிவுப் பகலவனாம் தந்தை பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத்தில் இடம் பெற்று, இன்று கோடானுகோடி தமிழ்மக்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும், இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல், சமுதாய வாழ்விற்கான விடிவெள்ளி, 1957 ஆம் ஆண்டு முதல் இதுவரை நடைபெற்ற

சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று ஐந்தாம் முறையாக முதல்வராக வீற்றிருக்கும் பொன்விழா காணும் புது யுகத்தின் தலைவர் கலைஞர் அவர்களின் இப்பொன்விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்திருக்கும், இந்தியத் திருநாட்டின் அரசியல் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்து, புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் சட்டம் பயின்று, தலைசிறந்த வழக்கறிஞராக பணியாற்றி, பின்னர் 9 முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு

தற்பொழுது பெருமைமிக்க நம் நாட்டின் மக்களவைத் தலைவராக அனைத்துக் கட்சிகளின் அன்பிற்கும் பாராட்டிற்கும் உரியவராக, இந்திய ஜனநாயக, நாடாளுமன்ற மரபுகளை நேர்மையுடனும், பாரபட்சமின்றியும் கடைப்பிடித்து வருபவரும், இந்தியப் பாராளுமன்றத்தின் தனித் தன்மையை எந்தச் சூழ்நிலையிலும் எந்த அமைப்பிற்கும் விட்டுக் கொடுக்காத நிலைப்பாட்டைக் கொண்டவரும், வங்கத்தின் சிங்கமாக விளங்கும் பொது

உடமைப் பூங்காவில் பூத்த மலராம் மாண்புமிகு சோம்நாத் சாட்டர்ஜி அவர்களே!

மக்களவையில் பல்வேறு கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் தங்களது கருத்துக்களையும், கண்டனங்களையும் எடுத்து வைக்கும்பொழுது சூடான வாதங்கள், விவாதங்கள் நடைபெற்று மக்களவை பரபரப்பான சூழ்நிலையில் இருந்தாலும்கூட, தாங்கள் தங்களுக்கே உரித்தான அறிவு, ஆற்றல், திறமை ஆகியவற்றின் காரணமாக எந்தவித உணர்ச்சிகளுக்கும் ஆட்படாமல்,

கட்சிப் பாகுபாடின்றி அவையை நடுநிலையோடு நடத்திச்செல்லும் பாங்கு சட்டமன்றத் தலைவர்களாகிய எங்களுக்கு ஒரு பாடமாகவும், வழிகாட்டுதலாகவும் அமைகிறது.

தங்களைப் போன்ற சட்ட அறிவும், பாராளுமன்ற அனுபவமும் உள்ள தலைவர்கள் மேன்மேலும் வளர்ந்து இந்தியத் திருநாட்டிற்கு வழி காட்டியாக விளங்க வேண்டுமென்றும், தாங்கள் இந்தியத் திருநாட்டில் மேன்மேலும் பல்வேறு உயர் பதவிகள் பெறவேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். இப்பொன்விழா நிகழ்ச்சிக்கு

வருகை தந்திருக்கும் உங்களை வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திருக்குவளை கண்டெடுத்த மாவீரன், அய்யன் திருக்குறளை கற்றறிந்த மேலோன், தமிழர்கள் வாழ்வை நிர்ணயிக்கும் வைகறை வானம், தெற்கே குடியிருக்கும் இந்தியாவின் வழிகாட்டி, சமுதாயத்தின் அழுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கேடயம், ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் தலைவர், எதிரிகளின் ஆர்ப்பரிப்பைத் தன் பண்பாலும், அடக்கத்தாலும் அடக்கும் செயல்

வீரர், உலகில் பரந்து வாழும் கோடானுகோடி தமிழர்களின் விடிவெள்ளி, என் ஊனும் உயிரும் உள்ளவரை எனக்கு வழிகாட்டும் தலைவர், அவர் வாழும் காலம் நானும் வாழ்ந்தேன் என்று பெருமைப்படும் வகையில், அய்யன் வள்ளுவர் நெறியில் ஆட்சிபுரியும் முத்தமிழறிஞர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே!

தலைவர் கலைஞருக்கு உற்ற தமையனாய், நல்ல துணையாக விளங்கும் மாண்புமிகு அவை முன்னவர் இனமான பேராசிரியர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! அனைத்துக் கட்சி தலைவர்களே! அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! சிறப்பு அழைப்பாளர்களே! அன்பான பத்திரிக்கையாளர்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே! இந்தப் பொன்விழாவைக் கண்டு பூரிக்க, தங்களைப் பெற்றெடுத்த தாய் தந்தை, அறிவூட்டிய தந்தை பெரியார், ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா ஆகியோர் இங்கில்லையே என்ற ஆதங்கம் தங்களுக்கு மட்டுமல்ல, தங்களை நெஞ்சில் வைத்து பூசிக்கும் எங்களுக்கும் அந்த ஆதங்கம் இழையோடாமல் இல்லை.

மாண்புமிகு முதல்வர் அவர்களே! தங்களது பேச்சால், மொழி நயத்தால், நிர்வாகத் திறமையால், உலக அளவில் தனி முத்திரையைப்

பதித்தவர் தாங்கள் ஒருவரே. தங்கள் அரசியல் அனுபவங்கள் அனைத்தையும் மனித நேய திட்டங்களை நிறைவேற்றவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

தங்கள் சாதுர்யத்தால் பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், தமிழகத்தில் வாழ்ந்த பெரியவர்கள், தலைவர்கள் அத்தனை பேரையும் அரசியல் வேறுபாடு கருதாமல் போற்றிப் பாதுகாத்துக் கொள்வது தங்களிடம் உள்ள ஒரு சீரிய பண்புகளுள் ஒன்று. ஒய்வறியா தமிழ்

மன்னன் நீங்கள்! நீங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு அரிய பொக்கிஷம். மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு பெருமை பெற்றிருப்பதற்கு முக்கிய காரணம் எங்களது அரிய பொக்கிஷமான கலைஞர் அவர்களது தனித் திறமைகளேயாகும்.

தங்களின் சட்டமன்ற பொன்விழா என்பது வரலாற்றில் ஒரு பெரும் பகுதி. தாங்கள் 1957 முதல் 2007 வரை சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து வெளியிட்டால் அதுவே ஒரு சரித்திரம். தங்களுடைய சட்டமன்ற

உரையில் உயர் இலக்கிய நயத்தைக் காணலாம். நல்ல தமிழின் இனிமையைச் சுவைக்கலாம். நகைச்சுவை ததும்பும் சட்டயர் எனப்படும் உயர்தகுதியைக் காணலாம். கவிதையின் ஓட்டத்தைக் காணலாம். தவறுகளைச் சாடும் ஆவேசத்தைக் காணலாம். ஆளுமைத் திறனைக் காணலாம். அதில் விவேகம் கூடிய விரைவைக் காணலாம். அசைக்க முடியாத திண்மையைக் காணலாம். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். தங்கள் சட்டமன்ற வரலாறு ஒரு சகாப்தம்.

நெஞ்சுக்கு நீதி என்ற நூலில் தாங்கள் குறிப்பிட்டீர்கள் – "என்னுடைய வாழ்க்கையில் மிகப் பெரும்பகுதி பொதுவாழ்வுக்கே செலவாயிருக்கிறது என்பது என் இதயத்திற்கு ஆறுதலைத் தர வல்லதாகும். எஞ்சியிருக்கும் நாட்களும் சிறப்பாகத் தமிழுக்கும், தமிழின மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்பது என் தணியாத ஆசை". நடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு "ஏ அப்பா! இவ்வளவு தூரம் நடந்து விட்டோமா! இனிமேல் நடக்க முடியாது" என்று அயர்ந்து போவதற்கு

பதிலாக, பரவாயில்லை இவ்வளவு தூரம் நடந்து விட்டோம் இன்னும் சிறிது தூரம்தான் என்ற புதிய விறுவிறுப்பை பெற்றாக வேண்டும். அந்த விறுவிறுப்பை பெறத்தான் என் வாழ்க்கையை நான் திரும்பிப் பார்த்துக் கொள்கிறேன். வாழ்க்கை ஒரு போராட்டம் என வர்ணிப்போர் இருக்கிறார்கள். எனக்கோ போராட்டமே வாழ்க்கையாகி விட்டது" என்று எழுதியிருக்கிறீர்கள்.

ஆம். தங்களின் வாழ்க்கையே போராட்டம் நிறைந்ததுதான். ஆனால், தலைவர் அவர்களே!

உங்கள் போராட்டம் என்கிற வயலில் விளைந்தவை அத்தனையும் சாதனைகள் என்கிற நன்முத்துக்கள். தங்கள் வியர்வையில் உயர்ந்தது தமிழகம், தாங்கள் சிந்திய இரத்தத்தில் நிலைத்திருப்பது தங்கள் தலைமையிலான திராவிட இயக்கம்.

தனிமைச் சிறையில் வாடிய கொடுமை எந்த அரசியல் தலைவனுக்கும் நிகழ்ந்ததில்லை. ஆனால், தங்களை மட்டும்தான் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைத்து வாட்டினார்கள். ஆனால், தாங்களோ

அந்த சிறைக் கொடுமையையும் புன்சிரிப்போடு ஏற்றீர்கள். அதனால்தான் அண்ணா தங்களைச் சந்தித்து வந்தபின் தாமிரபரணி மணற்பரப்பில் நடந்த கூட்டத்தில் சொன்னார் "என் தம்பி கருணாநிதி இருக்கும் பாளையங்கோட்டை சிறைச்சாலை நான் போற்றும் திருத்தலம்" என்று மனமுருகி கூறினார்.

"தன்னை வெல்வான் தரணியை வெல்வான்" என்று அந்த சிறைக்கூட முகப்பில் பொறித்திருந்தார்கள். ஆம். என் தம்பி "தன்னையும் வெல்வான், தரணியையும்

வெல்வான்" என்று அண்ணா அன்றே குறிப்பிட்டார்கள். ஆம் முதல்வர் அவர்களே! தாங்கள் இச்சட்டமன்ற பொன்விழா காணும் இந்நேரத்தில் மட்டுமே அல்ல என்றுமே இந்த தரணியை வெல்பவர்தான்.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பது சான்றோர் வாக்கு. அத்தகைய கற்று தமிழ்க்கனியாக விளங்கும் தங்களை மாண்புமிகு சோம்நாத் சாட்டர்ஜி போன்ற கற்றறிவாளர் வாழ்த்துவதைப் பெரும் சிறப்பாகக் கருதுகிறேன். இன்று தங்களை தமிழகச்

சட்டமன்றம் மட்டுமல்ல, மாண்புமிகு பாராளுமன்றத் தலைவர் அவர்கள் வருகை தந்து வாழ்த்துவதன் மூலம் இந்திய திருநாடே தங்களை வாழ்த்துகிறது. இன்று உலகம் பரவி வாழும் தமிழினமும் வாழ்த்துகிறது.

தங்களின் பொற்காலச் சரித்திரம், நிகழ்கால, வருங்கால சமுதாயத்திற்கு வழிகாட்டும் வரலாறு ஆகும். அரசியல் நன்னெறியும் ஆகும். தாங்கள் என்றும் இளமை உணர்வோடு, நிறைவான நலத்தோடு,

எங்களுக்கு வழிகாட்டவும் தமிழகத்திற்கு வளம் சேர்க்கவும் உளமார வணங்கிப் போற்றுகிறேன்.

வணக்கம்.